

அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து வேலைவாய்ப்பு பெற்ற நபர்க ளுக்கு பணியமர்வு ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா உள்ளனர்.

### அரியலூர் மாவட்டம் – குன்னம் தொகுதியில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,செப், 25-

அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டல் மையத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு தனியார்;துறை வேலைவாய்ப்பு முகாம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இச்சிறப்பு வேலைவாய்ப்பு முகாமினை துவக்கி வைத்து, இம்முகாமில் வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கு பணியமர்வு ஆணை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் தமிழகத்தை சேர்ந்த இளைஞர்கள் நல்ல கல்வி கொடுக்க வேண்டும், புதிய வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் திட்டமிட்டு பணியாற்றி வருகிறார். நாம் படித்த முடித்த போது நாம் படித்த படிப்பிற்கு வேலை தேடி செல்கின்றோம். வேலை தருபவர்கள் அவர்கள் நிறுவனத்திற்கு தேவையான திறன் இருக்கிறதா என பரிசோதித்து அந்த வேலைவாய்ப்பு வழங்குகின்றனர். இந்த இடத்திலே ஒரு இடர்பாடு நம் மாணவர்களுக்கு இருப்பதை நம் முதலமைச்சர் அவர்கள் அறிந்தார்கள். தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்ற திறன் நம்முடைய வேலை தேடுகின்ற இளைஞர்களுக்கு இடத்திலேயே இல்லை, அதற்கான காரணம் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படவில்லை. எனவே திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என "நான்; முதல்வன்" என்ற உன்னத திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் இருப்பதைப் போல வாழ்க்கையில் ஒவ்வொருவரும் எல்லோரும் வல்லவராக இருக்க வேண்டும் என்ற திட்டத்தினோடு கல்லூரி மாணவர்களுக்கு நான் முதல்வன் என்ற திட்டத்தின் மூலமாக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. நம்முடைய மாவட்டத்திலும் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி பெறுபவர் பயிற்சியின் மூலமாக தொழில் நிறுவனங்கள் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இந்த வேலைவாய்ப்பு முகாமிற்கு 102 நிறுவனங்கள் வந்திருக்கின்றன. முகாமிற்கு வந்த 2063 பேர் வேலைவாய்ப்புக்கு பதிவு செய்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்க இயலாது முகாமில் கலந்து கொண்டவர்களில் 297 நபர்களுக்கு வேலைவாய்ப்புக்கான ஆணை வழங்கப்படுகிறது. மேலும் 512 நபர்கள் இரண்டாம் கட்ட நேர்முக தேர்விற்கு தேர்வாகியுள்ளனர். மீதம் இருப்பவர்கள் வேலை கிடைக்கவில்லை என்று வருத்தப்பட தேவையில்லை. அடுத்தடுத்து கட்டங்களில் நடைபெறுகின்ற இதேபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களில் நாம் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள நம்மை தயார் செய்ய வேண்டும் அதற்கு இந்த அனுபவத்தை ஒரு அடித்தளமாக எடுத்துக்கொண்டு அடுத்த நேர்காணலில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் நாம் நம்மை தயார் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே குன்னம் தொகுதி மேலமாத்தூரில் ஒரு வேலை வாய்ப்பு முகாமும், கீழப்பழுவூர் பாலி டெக்னிக் கல்லூரியில் ஒரு வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது. இன்று செந்துறை போன்ற கிராமப் பகுதிகளிலும் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுபோன்ற கிராமங்களை சேர்ந்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என இது போன்ற முகாம்களுக்கு நடத்த ஆணை பிறப்பித்து உள்ளார்கள். தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில் வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக இதுபோன்ற தனியார் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அனைவருக்கும் அரசு பணி என்பது இயலாத காரியம் இதுபோன்ற தனியார் நிறுவனங்கள் உள்ள வேலை வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் உலகெங்கும் உள்ள பெரு நிறுவனங்களை தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இரண்டு முறை அயல்நாட்டு பயணங்கள் மேற்கொண்டு அங்குள்ள தொழில் நிறுவனங்களை தொழில் தொடங்க அழைத்து வந்துள்ளார்கள். வருகின்ற ஜனவரி மாதத்தில் மாபெரும் தொழில் முதலீட்டு மாநாடு நடைபெற இருக்கின்றது. பல நாட்டைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களை பங்கேற்க செய்து தமிழகத்தில் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். குன்னம் தொகுதியில் சிப்காட்டில் தைவான் நாட்டைச் சேர்ந்த காலணி தயாரிக்கும் தொழிற்சாலை தொழில் தொடங்க உள்ளார்கள். அதனையொட்டி 5,000 முதல் 10,000 வேலை வாய்ப்பு பணிகள் கிடைக்க உள்ளது.

எனவே இது போன்ற நிறுவனங்களில் பணி சேர்வதற்கு நம்மை நாம் தயார் செய்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு என்ன தொழில்நுட்பத்திற்கு ஆள் தேவையோ அதைத்தான் அவர்கள் தேர்வு செய்வார்கள் அதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் நம்முடைய

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய திட்டங்களை நாம் பயன்படுத்திக் கொண்டு வாழ்கையில் முன்னேற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசினார்.

இம்முகாமில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அ.கலைச்செல்வன், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், ஆர். கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன்,

ஒன்றிய துணை செயலாளர்கள் ஆசைத்தம்பி, கோடி, சபாபதி, காளமேகம் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ. இளஞ்செழியன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பி.ஆர்.பாண்டியன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆதி. இளங்கோவன், மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் செல்வம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கண்ணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மாரிமுத்து, செந்துறை முதல்நிலை ஊராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர் செல்லம் கடம்பன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் மூ.வினோத்குமார் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமணி, கடலரசு, சுந்தர், செந்தமிழ்ச்செல்வன், தனபால், மகளிர் அணி நிர்வாகிகள் சித்ரா, இலக்கியா, சுகன்யா, சரிதா, மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### என்.இளையராஜா தலைமை ! ஆர்.டி.எஸ்.சரவணன் முன்னிலை!

# திருமருகல் தெற்கு ஒன்றியம் - பேரூரில் இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை!

## மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் தொடங்கி வைத்தார்!

நாகை. செப்.25-

நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியம் ஆதலையூரில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இல்லம் தோறும் தி.மு.க. இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் என்.இளையராஜா தலைமை தாங்கினார். திருமருகல் தெற்கு ஒன்றியக்கழகச் செயலாளர் ஆர்.டி.எஸ். சரவணன் முன்னிலை வகித்தார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி வரவேற்றார்.

இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தலை நாகை மாவட்டக் கழகச்செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் வீடு வீடாக சென்று இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தலை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆரூர். மணிவண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கலையரசன், தாமோதரன், டி.எஸ்.அசோக், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இளம்சுந்தர், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வி, சுற்றுசூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பார்த்திபன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சிவக்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ராம்ராஜன், மாவட்ட தொண்டர் அணி தலைவர் சிவராமன், திருமருகல் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் அவைத் தலைவர் ஜபகர் அலி, துணைச் செயலாளர்கள் துரையரசன், பாலையன்,

கலாசுந்தராஜன், ஒன்றிய பொருளாளர் கலியமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் ரமேஷ்கண்ணா, மகேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பாண்டியன், தென் மதிசந்திரசேகர், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முகமது பைசில், ராஜ்மோகன், சக்திவேல், வில்செண்ட், செல்வம், கிளை செயலாளர்கள் நாராயணசாமி, கண்ணையன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ். அருண் நன்றி கூறினார்

திட்டச்சேரி பேரூரில் நடைபெற்ற இல்லம் தோறும் இளைஞர் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா தலைமைத் தாங்கினார். பேரூர் செயலாளர் முகமதுசுல்தான் முன்னிலை வகித்தார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி வரவேற்றார். திட்டச்சேரி பேரூரில் உள்ள வார்டுகளில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கையை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.







ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி அரசு ஆண்கள் விளையாட்டு மைதானத்தில் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதிகளுக்கு திடக்கழிவுகளை சேகரிப்பதற்காக மின்கலம் மூலம் இயங்கும் புதிய வாகனங்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கி, கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா , மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி.கே.சரஸ்வதி, மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சு.குணசேகரன், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் எஸ். கணபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலை!

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ராணி சிறப்புரை!

புதுக்கோட்டை செப்25

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் 28.9.2023 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி) திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

காலநிலை மாற்றம், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாநில மகளிர் அணிச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தபசுமணி வரவேற்புரையாற்றுகிறார். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அ.பிரபா, தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட, ஒன்றிய மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி முத்து நன்றி கூறுகிறார்.

5 ஆம் ஆண்டு
நினைவு அஞ்சலி

தோற்றம் : 10.07.1947
மறைவு : 25.09.2018



தமிழக நவீன சிற்பி பாசத்தலைவர் கலைஞரின் அன்புத்தம்பியாய்
உழைப்பின் சிகரம் தமிழக முதல்வர் தலைவர் தளபதியாரின் -யின் அன்புக்குரியவராய்

கழகத்தின் தடம் மாறா தொண்டராய் வாழ்ந்து மறைந்த

கிருஷ்ணகிரி சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் திரு. P.V.ஸ்ரீராமுலு Ex,M.L.A., -வின் மகன்

முன்னாள் தி.மு.க நகர செயலாளர், ஒன்றிய செயலாளர், மாவட்ட துணை செயலாளர், மாவட்ட அவைத்தலைவர்,
திரு.P.V.S.வெங்கடேசன் Ex,M.L.A.,
காவேரிப்பட்டிணம் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்
1996 - 2001

உங்கள் நினைவில் என்றும்.
PVSV.மணிவிஜயன் B.Sc.,MBA.,
மாவட்ட வர்த்தகஅணி அமைப்பாளர்,கிருஷ்ணகிரி கிழக்கு
திராவிட முன்னேற்ற கழகம்
காவேரிப்பட்டிணம், கிருஷ்ணகிரி மாவட்டம்.